புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 189 | 13-01-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 189 | 13-01-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# "மொழிக்காக உயிரையும் தந்த தியாக மறவர்களை கொண்ட இயக்கம் திமுக" : முதல்வர் ஸ்டாலின்

சென்னை: ஜன.13–

"மொழிக்காக போராடிய இயக்கம் மட்டுமல்ல, மொழியுரிமை காக்க தங்கள் உயிரையே தந்த தியாக மறவர்களைக் கொண்ட இயக்கம் திமுக" என அயலக தமிழர் தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2026" விழாவில், அயலகத் தமிழர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் விருது வழங்கினார். பின்னர் அவர் பேசியபோது, "நூற்றாண்டுகளுக்கு முன் தங்களின் தாய்மண்ணான தமிழ்நாட்டில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக, வாய்ப்புகளுக்காக பறந்து சென்றவர்கள் உங்கள் முன்னோர்கள்.

அவர்களை வாழ்க்கை தேடிப் சென்றவர்கள் என்று சொல்வதைவிட, அந்தந்த நாடுகளை வளப்படுத்த சென்றவர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு நன்மை செய்வதை போலவே, அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் சகோதரனாக இருந்து நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

உங்களுக்காகவே அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஓய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது. வேறு நாட்டில் செட்டிலான சிட்டிசனாக இருந்தாலும், அயலகத்தில் உழைக்கும் தமிழ்நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும், நீங்கள் எந்த குறையும் இல்லாமல் வளமாய் வாழ வேண்டும் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

* நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு,'அயலகத் தமிழர் நல வாரியம்' என்று 15 உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்தோம்.

* ஜனவரி 12 அயலகத் தமிழர் நாளாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழால் இணைவோம்,உலகெங்கும் தமிழ், தமிழ் வெல்லும் என்று கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கிறது.

* தமிழ்நாட்டில் 105 முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக, 7 ஆயிரத்து 469 வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு,படிப்படியாக கட்டப்பட்டு வழங்கிக் கொண்டிருக் கிறோம்.

* வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவி மையம் துவக்கப்பட்டிருக்கிறது.

* "தமிழ் வேர்களைத் தேடி பயணம்" மூலமாக உங்களை எல்லாம் தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வருகிறோம்.

* புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் 'எனது கிராமம்' திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது.

* அயல்நாடுகளில் வேலைக்குச் சென்று அங்கு இறக்க நேரிடும் வாரிய உறுப்பினர் குடும்பத்திற்கு மாதந்தோறும் நிதியுதவி அளிக்கும் திட்டம் அமலில் இருக்கிறது.

*உக்ரைன்,கம்போடியா, தாய்லாந்து, மியான்மர், இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில், 2 ஆயிரத்து 398 தமிழர்களை அயல்நாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் மீட்டுக்கொண்டு வந்திருக்கிறோம்.

* தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகவே, தமிழ்ப் பரப்புரைக் கழகம் என்ற ஒரு அமைப்பைச் செயல் பட வைத்திருக்கிறோம்.

* புலம் பெயர்ந்த மண்ணில் தமிழுக்காகப் பாடுபடும் தமிழ்ச் சங்கங்களுக்கு விருதுகள் மற்றும் அங்கீகாரம் அளிக்கிறோம். கல்வி, அறிவியல்,தொழில்நுட்பம், வணிகம் ஆகிய துறைகளில் சாதனை படைக்கும் அயலகத் தமிழர்களைத் தேர்ந்தெடுத்து, கணியன் பூங்குன்றனார் விருது வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

* அயலகத்தமிழர்களில் பன்முகத்தன்மையோடு விளங்கும் ஒரு தமிழரைத் தேர்ந்தெடுத்து, "தமிழ்மாமணி" விருதும், பட்டயமும் வழங்கியிருக்கிறோம்.

* அயல்நாட்டுத் தமிழர்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே உறவுப் பாலமாக செயலாற்றும் அயலகத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு "சிறந்த பண்பாட்டுத் தூதுவர்" விருதையும் வழங் கிக் கொண்டிருக்கிறோம்.




உங்களை பாராட்ட வேண்டும் என்று மட்டுமல்ல, உங்களுடன் இருக்கும் உறவு தொடர வேண்டும் என்றுதான் இதையெல்லாம் செய்கிறோம். வாழ்வதும் வளர்வதும் தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும் என்று செயல்படும் அரசு நம்முடைய அரசு.

தமிழ் என்னும் உலக மொழிக்கு சொந்தக்காரர்கள் நாம். தமிழ்தான் நம்மை ஒற்றுமைப்படுத்தும். சாதி வேற்றுமைகளையும், மத வேறுபாடுகளையும் வீழ்த்தி அனைவரையும் ஒன்றாக்கும் வல்லமை தமிழ் மொழிக்கு மட்டும் தான் உண்டு. வாழும் நாடுகளால் நாம் பிரிந்திருந்தாலும், மொழி நம்மை இணைத்து விடுகிறது. வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று திராவிட இயக்கம் தமிழ் மண்ணில் விதைத்தது. அதனால்தான், இந்திய மாநிலங்களிலேயே தனித்தன்மை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு வளர முடிந்தது.

மொழிக்காக போராடிய இயக்கம் மட்டுமல்ல,மொழியுரிமை காக்க தங்கள் உயிரையே தந்த தியாக மறவர்களைக் கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிப்பற்றும், இனப்பற்றும்தான் நமக்கு உண்டு. அது மொழி வெறியாக, இனவெறியாக நாம் எப்போதும் மாறமாட்டோம். நமக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும். உங்களின் கல்வியும், அறிவும்தான் உங்களை காக்கும்.

அறிவும், உழைப்பும் தான் உங்களை இவ்வளவு தூரத்திற்கு, இவ்வளவு உயரத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. இதை மட்டுமே நம்பி உங்கள் வாழ்க்கைப் பயணத்தை தொடருங்கள். நம்முடைய இலக்கியத்தை வைத்து, தமிழர்களின் பழம் பெருமையை நாம் பேசிய போது,"கற்பனைவாதிகள்" என்று சிலர் கிண்டல் செய்தார்கள். இன்னும் சிலர் இனவாதிகள் என்று நம்மை பழித்தார்கள். இலக்கியத்தில் இருப்பதெல்லாம் வரலாறு ஆகாது என்று சொன்னார்கள்.

ஆனால், தமிழ் தமிழ் நிலம் தமிழ்நாடு குறித்து நாம் இதுவரை சொல்லி வந்ததெல்லாம் புனைவுகளோ, அரசியலுக்காக சொன்னதோ இல்லை என்று இப்போது நிரூபித்துவிட்டோமா இல்லையா? வரலாற்று ஆதாரங்களை தேடி எடுத்து, ஆய்வுக்கு உட்படுத்தி, உலக அறிஞர்களையே ஏற்றுக்கொள்ள வைத்தோமா இல்லையா? நம்முடைய திராவிட மாடல் அரசு இந்த வரலாற்றுக் கடமையை செய்து காட்டியிருக்கிறதா இல்லையா?

*கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக, நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்பது இன்றைக்கு உறுதியாகி இருக்கிறது.

* கீழடியில் நெல் மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கிறது.

* அந்தக் காலத்திலேயே கல்வி பெற்றவர்களாக தமிழர்கள் இருந்திருக் கிறோம்.

* சிவகளை வாழ்விடப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்ததில், அங்கே நீர் செல்லும் செங்கல் வடிகாலில் நன்னீர் சென்றிருக்கிறது.

* கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறையில் கிடைத்த பொருளின் மூலமாக, தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு 4200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது என்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய கண்டுபிடிப் புகளையெல்லாம் அழகாக காட்சிப்படுத்தி,• 'கீழடி அருங்காட்சியகம்' மற்றும் பொருநை அருங்காட்சியகத்தை நான் அண்மையில் திறந்து வைத்திருக்கிறேன். நீங்கள் எல்லோரும் கட்டாயம் அங்கு சென்று பார்க்க வேண்டும் பார்வையிட வேண்டும்

* சிந்துவெளி எழுத்துகளில் 100 ஆண்டுகளாக புதைந்திருக்கும் புதிருக்கு விடை கண்டுபிடித்தால், எட்டரை கோடி ரூபாய் பரிசு என்று நானே அறிவித்திருக்கிறேன்.

* தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில், சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கத்தையும் நடத்தியிருக்கிறோம்.

* சிந்துவெளி நாகரிகத்தை உலகிற்கு அறிவித்த சர் ஜான் மார்ஷல் அவர்களுக்கு சிலை அமைத்திருக்கிறோம்.

* ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, நாட்டிலேயே அதிக அளவில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்று வரும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்துகொண்டிருக்கிறது.

* தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகறிய செய்ய உழைக்கும் அறிஞர்களுக்கு, ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

இதனால்தான், "இது ஒரு கட்சியின் அரசல்ல, இனத்தின் அரசு" என்று நான் தலைநிமிர்ந்து சொல்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, குறள் வார விழா நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கிறது என்று அறிவித்திருக்கிறேன். வள்ளுவரைக் கொண்டாடுவதில் நம்மை அடித்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்.

மொழி சிதைந்தால், இனம் சிதையும். இனம் சிதைந்தால், நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பண்பாடு சிதைந்தால், நம்முடைய அடையாளம் போய்விடும். அடையாளம் போய்விட்டால், தமிழர் என்றுசொல்லிக்கொள்ளும் தகுதியையே இழந்து விடுவோம். நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், ஒற்றுமையாக வாழுங்கள்.

அந்த நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடுங்கள். அங்கு உள்ளவர்களுக்கும் தமிழ்நாட்டின் பெருமைகளை எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் சகோதரனான, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருக்கிறான் என்று மறந்துவிடாதீர்கள்"இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




அமைச்சர் முத்துசாமி ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், முதல்வர் (ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி) இரா.சங்கரசுப்பிரமணியன் உட்பட பலர் உள்ளனர்.

# கரூர் முதல் பெருந்துறை வரை புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து இயக்கம்.. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஈரோடு எம்பி பிரகாஷ் துவக்கி வைத்தனர்..



ஈரோடு. ஜன. 13

கரூரில் இருந்து சிவகிரி வழியாக பெருந்துறைக்கு புதிய வழித்தடத்தில் அரசு பேருந்து இயக்கப்பட்டுள்ளது.

கரூர் முதல் பெருந்துறை வரை உள்ள, கொடுமுடி, சிவகிரி, அரச்சலூர், வெள்ளோடு உள்ளிட்ட பல ஊர்களுக்கு பேருந்து வசதி வேண்டும் என அந்த ஊரை சேர்ந்த பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தனர்.

இந்த நிலையில் தமிழ்நாடு போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரன் உத்தரவின் பெயரில், கரூர் முதல் பெருந்துறை வரை கொடுமுடி, சிவகிரி, அரச்சலூர், வெள்ளோடு வழிதடத்தில் புதிய பேருந்து இயக்க அரசாணை வெளியிடப் பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் கரூர் பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி புதிய வழித்தடத்தில் கொடிய சித்தி பேருந்தை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து அந்தப் பேருந்து ஈரோடு மாவட்டம் சிவகிரி வந்தபோது அந்தப் பேருந்தை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ் வரவேற்றார். பின்னர் பேருந்து அறச்சலூர், வெள்ளோடு வழியாக பெருந்துறை சென்றடைந்தது.

நீண்ட நாள் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று அந்த வழிதடத்தில் புதிய பேருந்து இயக்கப் பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அந்த ஊர்களின் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சிவகிரி பேரூராட்சி தலைவர் பிரதீபா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்.. 230 மனுக்கள் வர பெற்ற நிலையில் மேல் நடவடிக்கைக்கு உத்தரவு..

ஈரோடு. ஜன. 13

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் வந்திருந்து கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

தமிழ்நாடு முழுவதும் வாரம் தோறும் திங்கட்கிழமை காலை ஆட்சியர் அலுவலகத்திலும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நேற்று காலை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களை சேர்ந்த பொதுமக்கள் வந்திருந்து தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக



கொடுத்தனர்.

இதில் இலவச வீட்டு மனை, வீட்டுமனை பட்டா கோருதல், முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை மற்றும் கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை, மேலும் தங்களது பகுதிகளில் உள்ள பல்வேறு குறைகள் குறித்தும், காவல்துறை சார்ந்த நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் மனுக்கள் கொடுத்தனர்.

இந்த வகையில் மொத்தம் 230 கோரிக்கை மனுக்கள் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த மனுக்கள் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவிட்டார்.

மேலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்துக்கு வந்திருந்த மாற்று திறனாளிகளிடம், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் நேரில் சென்று குறைகளை கேட்டறிந்து அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மேலும் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 13 நபர்களுக்கு, 13.30.000/ லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும். வழங்கப்பட்டது.

மேலும் இந்த மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் பல நல திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டத்தில் அனைத்து துறை அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்றனர்.

## புதுச்சேரியில் லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் முப்பெரும் விழா: நலத்திட்ட உதவிகள் மற்றும் பரிசுகள் வழங்கல்!



புதுச்சேரி:ஜன.13–

லட்சிய ஜனநாயக கட்சியின் (LJK) மாநில மகளிர் அணி சார்பில் தைப்பொங்கல் திருவிழா, பரிசளிப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தலைமை தாங்கி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளையும், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளையும் வழங்கினார்.

மாநில மகளிர் அணி தலைவி IGV. பிரபாவதி வீரராகு விழாவிற்குத் தலைமை தாங்கினார். உழவர்கரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் M. சிவசங்கர் மற்றும் திருபுவனை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் P. அங்காளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் பொதுமக்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறுபவர்களுக்குப் பின்வரும் பரிசுகள் வழங்கப்பட்டது,

முதல் பரிசு: பிரிட்ஜ் (Fridge)

இரண்டாம் பரிசு: 32 இன்ச் கலர் டிவி (LED TV)

மூன்றாம் பரிசு: வாஷிங் மெஷின் (Washing Machine)

பட்டுப் புடவை

மேலும், சுமார் 3000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது குறிப்பிடத் தக்கது. இவ்விழாவில் கட்சியின் மாநில பொதுச் செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ள உள்ளனர்.

## கோவையில் திராவிட பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது!!



கோவைஜன:13

இடையர்பாளையம் பகுதியிலுள்ள திமுக மருதமுத்து நினைவு படிப்பகம் முன்பு வடக்கு மாவட்ட திமுக இடையர்பாளையம் பகுதி கழகம் சார்பாக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி அவர்களின் ஆசியுடனும் திராவிட பொங்கல் விழா இடையர் பாளையம் பகுதி செயலாளர் மதியழகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது இவ்விழாவில் பெண்களுக்கு கோலப்போட்டி, கயிறு இழுக்கும் போட்டி, ஆண்கள் சைக்கிள் ரேஸ் போட்டி, கிரிக்கெட், ஓட்டப் பந்தயம் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள் நடைப் பெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்ற அனை வருக்கும் அரிசி டப்பா, சமையல் பாத்திரங்கள், டிபன் பாக்ஸ், குழந்தைகளுக்கு நோட், புத்தகங்கள் என ஏராளமான பரிசு பொருட்களை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டமுத்தூர் ரவி அவர்கள் வழங்கினர். இதில் வடக்கு மாவட்ட விவசாய அணி சுபகுமார் மற்றும் குமரேசன்,சம்பத், நாகராஜ்,தியாகராஜன், தாஸ்,மாலதி,குணா, கோனார் மற்றும் இளைஞர்கள் மகளிர்கள், கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், கழக உடன்பிறப்புகள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

## மணப்பாறை அருகே தொடர் மழையால் இரண்டு வீடுகளில் ஓடுகள் இடிந்து விழுந்து சேதம். வருவாய்துறையினர் நேரில் ஆய்வு



திருச்சி. ஜன. 13–

திருச்சி மாவட்டம், மணப்பாறை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று நள்ளிரவு முதல் மழை அவ்வபோது விட்டு விட்டு பெய்து வருகின்றது. இந்நிலையில் தொடர் மழையின் காரணமாக பொன்னக்கோன்பட்டி பகுதியில் கூலித் தொழிலாளியான ஆலீஸ் சோபியா ராணி (49) என்பவரின் வீட்டின் ஓட்டு வீட்டில் மேல் புறத்தில் இருந்து ஓடுகள் இடிந்து விழுந்தது. தொடர் மழையால் அவரும் அவரது மகனும் அருகில் உள்ள வீட்டில் தூங்கியதால் எந்தவித அசம்பாவிதமும் நிகழவில்லை. இருப்பினும் ஓடுகள் இடிந்து விழுந்ததால் வீட்டில் இருந்த பொருட்கள் சேதமடைந்தது. இதே போல் அருகில் ஜான்பால் என்பவரின் வீட்டின் மேல்புறத்தில் இருந்த ஓடுகள் இடிந்து விழுந்தது. இதனால் இரண்டு வீடுகளும் சேதமடைந்ததை அடுத்து வருவாய் துறையினர் நேரில் சென்று விசாரணை நடத்தினர். மிகவும் வறுமையில் உள்ள நிலையில் தாங்கள் வீடு இடிந்து விட்டதால் மிகவும் சிரமத்தில் இருப்பதாகவும், அரசு வீடு வழங்கிட வேண்டும் என்று ஆலீஸ் சோபியா ராணி அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

## திருவள்ளூரில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் ராமன் குமார் நகராட்சி,வாக்குச்சாவடி மையங்களில் உள்ள உதவி மையங்களை நேரில் ஆய்வு




திருவள்ளூர் ஜன 13 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய அரசு கூட்டுறவுத் துறையின் இணை செயலாளரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளருமான ராமன் குமார் தலைமை தாங்கினார். மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிந்தார்.

அதனை தொடர்ந்து, பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பொன்னேரி நகராட்சி அலுவலகத்திலும், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், மெதூர் ஊராட்சி காவல்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலும், திருப்பாளைவனம் ஊராட்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும் ஒன்றிய அரசு கூட்டுறவுத் துறையின் இணை செயலாளரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளருமான ராமன் குமார் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் முன்னிலையில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக நடைபெற்ற சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நடைபெற்று வரும் பணிகளின் விபரங்களை கேட்டறிந்தார்.

மேலும், ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஆவடி காமராஜ் நகர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஒன்றிய அரசு கூட்டுறவுத் துறையின் இணை செயலாளரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளருமான ராமன் குமார் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் முன்னிலையில் வாக்களார் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக நடைபெற்ற சிறப்பு முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், வாக்காளர் பதிவு அலுவலரும் பொன்னேரி சார் ஆட்சியருமான ரவிகுமார்,வாக்காளர் பதிவு அலுவலரும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையருமான மாரிசெல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஸ்ரீராம், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கே.எம்.தனலட்சுமி (பொன்னேரி நகராட்சி ஆணையர்), சோம சுந்தரம் (பொன்னேரி வட்டாட்சியர்), கண்ணன் (ஆவடி வட்டாட்சியர்), மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி,வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள்,வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து சமீபத்தில் விலகிய அக்கட்சியின் முன்னாள் துணைச் செயலாளரும், ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் முன்னாள் மாநில பொதுச் செயலாளருமான சேது செல்வத்தை, லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின், தட்டாஞ்சாவடி தொகுதிக்குட்பட்ட அவ்வை நகர் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். முன்னதாக சேதுசெல்வத்தின் இல்லத்திற்கு வருகை தந்த லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டினுக்கு, பட்டாசுகள் வெடித்து, மலர் தூவி உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து, சேதுசெல்வத்தின் ஆதரவாளர்கள் 200க்கும் மேற்பட்டோர், ஜோஸ் சார்லஸ் மார்டினுக்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து வழங்கி வரவேற்றனர். தொடர்ந்து லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் மற்றும் நிர்வாகிகளுக்கு அவரது இல்லத்தில் அறுசுவை அசைவ விருந்து அளித்தார் சேது செல்வம். விரைவில் சேதுசெல்வம் லட்சிய ஜனநாயக கட்சியில் இணைய உள்ள நிலையில், இந்த சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சியை தொடர்ந்து பொங்கல் பண்டிகை ஒட்டி சேது செல்வம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கரும்பு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அப்பகுதி மக்களுக்கு கரும்புகள் வழங்கி பொங்கல் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டார்.

## கோவை வாசவி வித்யாலயா பள்ளி ஆண்டு விழா.

கோவை :ஜனவரி13

வாசவி வைபவ் என நடைபெற்ற இதில் கல்வி மற்றும் விளையாட்டு போட்டிகளில் சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி கவுரவிப்பு.

கோவை வாசவி வித்யாலயா நர்சரி பிரைமரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி சார்பாக வாசவி




வைபவ் எனும் தலைப்பில் பள்ளி ஆண்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.வாசவி மித்ரா மகால் அரங்கில் நடைபெற்ற விழாவில் பள்ளியின் தலைவர் அசோகன் ராம்தாஸ் தலைமை தாங்கினார். செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் பெல்லம் ரங்கநாதன்,சேர்மன் சுரபி கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விழாவில் பள்ளி மாணவர்கள் ஒருங்கிணைந்த கலை நிகழ்ச்சிகள்,நடனம், நாடகம், பாட்டு போன்ற நிகழ்ச்சிகளில் மாணவர்கள் தங்கள் பன் முக திறமைகளை வெளிப்படுத்தினர்.தொடர்ந்து கடந்த ஆண்டு கல்வி, விளையாட்டு போன்றவற்றில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

## மணப்பாறை அருகே காவிரி குடிநீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பால் லட்சக்கணக்கான லிட்டர் குடிநீர் வீணானது.

திருச்சி. ஜன.13–

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த கலிங்பட்டி அருகே மருங்காபுரிக்கு குடிநீர் வழங்கப்படும் பெரிய அளவிலான காவிரி குடிநீர்



குழாய் உள்ளது. மிகவும் சேதமடைந்து காணப்படும் இந்த குழாயில் அவ்வபோது உடைப்பு ஏற்பட்டு காவிரி குடிநீர் வீணாக செல்லும் நிலையில் இன்று மாலையும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு சுமார் 10 அடி தூரத்திற்கு மேல் காவிரி நீர் பீறிட்டு வெளியேறி ஆற்றில் வீணாக சென்றது. இதைப்பார்த்த அந்த பகுதி மக்கள் குடிநீர் வழங்கல் துறையினருக்கு அளித்த தகவலின் பேரில் அதிக திறன் கொண்ட மின்மோட்டார் நிறுத்தப்பட்டதை அடுத்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு பின் குடிநீர் வீணாவது நிறுத்தப்பட்டது. இருப்பினும் லட்சக்கணக்கான லிட்டர் குடிநீர் வீணாக சென்றது மக்களை வேதனையடையச் செய்தது.

## கோவை ஸ்ரீ ரங்கம்மாள் கல்வி நிலையத்தில் நடைபெற்ற யங் பிரனேர் (Young Preneur) எனும் நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் சொந்த விற்பனை அரங்குகளை அமைத்து தங்களது தொழில் முனைவோர் திறன்களை நிரூபித்தனர்..




கோவை, ஜன,13

கோவை அவிநாசி சாலையில் உள்ள ஸ்ரீ ரங்கம்மாள் கல்வி நிலையம் ஆர்.கே.எஸ் கல்வி நிறுவனம் சார்பாக தொழில் முனைவு குறித்து மாணவர்கள் தெரிந்து கொள்ளும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் (Young Preneur) யங் ப்ரேனர் எனும் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது..

இந்நிலையில் 2026 ஆண்டில், இளம் தலைமுறை மாணவர்களுக்கு பொங்கல் பண்டிகையின் பண்பாட்டினை மதிக்கவும், தொழில்துறை ஆவலை வளர்க்கவும் யங் பிரனேர் நிகழ்வு பள்ளி வளாகத்தில் நடைபெற்றது..

இதற்கான துவக்க விழாவில், சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட காவல் துறை துணை ஆணையர் திவ்யா கலந்து கொண்டார்..

நிகழ்ச்சி குறித்து, சவால்கள் நிறைந்த இன்றைய காலத்தில் மாணவ பருவத்திலேயே மாணவர்கள் கல்வி பயில்வதோடு கூடுதல் திறன்களை வளர்த்தி கொள்வது அவசியமாக இருப்பதாக தெரிவித்த அவர், அதன் அடிப்படையில் மாணவர்கள் வாழ்க்கை திறன் களை அபிவிருத்தி செய்யும் ஒரு தளத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதாக தெரிவித்தார்.

மாணவர்களுக்கு நேரடியாக தொழில் துறை அனுபவத்தை வழங்கும் வகையில் நடைபெற்ற இதில் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தங்களது சொந்த முயற்சியில் சுமார் 20 க்கும் மேற்பட்ட அரங்குகளில் தங்களது பொருட்களை காட்சி படுத்தி விற்பனை செய்தனர்..

இதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான துணி வகைகள்,பேன்சி பொருட்கள்,உணவு அரங்குகள், என பல்வேறு அரங்குகளை அமைத்த மாணவர்களிடம் பெற்றோர்கள் மற்றும் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ,ஆசிரியர்கள், பொது மக்கள் என பலரும் பொருட்களை ஆவலுடன் வாங்கி சென்றனர்..

ஆர்.கே.எஸ் கல்வி நிறுவனம் சார்பாக மாணவர்களை அடுத்த தலைமுறை தொழில் முனைவோர்களாக மாற்றும் புதிய முயற்சியாக நடைபெற்ற இந்நிகழ்ச்சி அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது குறிப்பிடதக்கது.

# புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தொகுதி தலைவர்கள் 6 பேரில் 30 சதவீதம் பெண்களுக்கு வாய்ப்பு கொடுத்து இரண்டாவது பட்டியலை ஆர்.எல். வெங்கட்ராமன் வெளியிட்டார்.

புதுச்சேரி ஜன.13–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் 10 பேர் கொண்ட தொகுதிகளுக்கான தலைவர்களின் முதல் பட்டியலை வெளியிட்டிருந்தோம். அதனை தொடர்ந்து 6 தொகுதி தலைவர்கள் கொண்ட இரண்டாவது பட்டியலை மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் வெளியிட்டார்.

தொகுதி தலைவர்களின் அறிமுகக் கூட்டம் ழி. சிவகுமாரன் தலைமையில், கோமதி சங்கர், யி. சுப்ரமணியன், ஷி. கவிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் காலாப்பட்டு, ராஜ்பவன், லாஸ்பேட்டை, இந்திரா நகர், மண வெளி, நெட்டப்பாக்கம் ஆகிய 6 தொகுதிகளுக்கான தலைவர்களையும், மாநில மகளிர் அணி பொது செயலாளராக திருமதி. டாக்டர். கீதாமணி அவர்களையும் மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் அவர்கள் அறிவித்தார். அவர்கள் அனைவரையும் வரவேற்று கட்சி துண்டு அணிவித்து



போற்றி கவுரவித்து அறிமுகம் செய்து வைத்தார். அப்போது லாஸ்பேட்டை தொகுதியை சார்ந்த பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி 25 பெண்களுக்கு மேல் முருகன் தலைமையில் தங்களை ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்..

பெண்களுக்கு 30 சதவீதம் வாய்ப்பு.!!!.

இதுவரை மொத்தம் 16 தொகுதிகளுக்கான தலைவர்களை நியமித்து உள்ளோம். அதில் 30 சதவீதம் பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 5 பெண்களுக்கு வாய்ப்பு கொடுத்து உள்ளோம்.

தொகுதி தலைவர்கள் அறிமுக கூட்டத்தில் ஆர் எல். வெங்கட்ராமன் பேசியதாவது.!!!.

புதுச்சேரியில் மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று நலமுடன் வாழ்வதற்காகத்தான் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஆகவே நியமிக்கப்பட்டுள்ள புதிய தலைவர்கள் மக்களோடு மக்களாக இணைந்து மக்களின் அடிப்படை பிரச்சனைகளை புரிந்து அதனை தீர்த்து வைக்க உண்டான வேலையை செய்ய வேண்டும். மக்கள் நலப்பணிகள் தீவிரப்படுத்தும் நோக்கில் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேலும் ஆறு தொகுதி தலைவர்கள் இன்று நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 16 தொகுதிகளுக்கான தலைவர்களை நியமித்து உள்ளோம். அதில் பெண்கள் 5 பேர் தலைவர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். தொகுதி தலைவர்களாக பொறுப்பு ஏற்று இருப்பவர்கள் தொகுதி நிர்வாகிகளை நியமிக்கும் போது மகளிருக்கு 30 சதவிகிதம், கட்சியில் உணர்வு பூர்வமாக செயல் படுபவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்.

ஆறு தொகுதிகளுக்கான தலைவர்களின் இரண்டாவது பட்டியல் .

1.காலாப்பட்டு : V.அனிதா

2 . ராஜ்பவன்: S தாயாரம்மா.

3 .லாஸ்பேட்டை: முருகன்

4 .இந்திரா நகர்: அதியமான்.

5.மணவெளி: S. தனலட்சுமி

6 நெட்டப்பாக்கம் : வசந்தா தேவராசு ஆகிய ஆறு தொகுதிகளுக்கான தலைவர்களின் இரண்டாவது பட்டியலை மாநில தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் வெளியிட்டார்.

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற்று தந்து இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக புதுச்சேரியை மாற்றுவோம் ஜெகத்ரட்சகன் எம்.பி. உறுதி !



புதுச்சேரி, ஜன.13–

புதுச்சேரி மாநிலம் கதிர்காமம் தொகுதி திமுக சார்பில், தொகுதி செயலாளர் வடிவேல் ஏற்பாட்டில் திராவிட பொங்கல் விழா மேட்டுப்பாளையம் ஐயப்பன் கோவில் எதிரில் நேற்று மாலை நடைபெற்றது.

சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரும், மாநில கழக அமைப் பாளருமான இரா. சிவா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட் சகன் எம்.பி கலந்து கொண்டு திராவிட பொங்கல் விழாவை தொடங்கி வைத்தார். தொடர்ந்து ஏராளமான மகளிர் புதுப்பானையில் பொங்கலிட்டு மகிழ்ந் தனர். இதையடுத்து நாட்டுப்புற பாடல் இசை கச்சேரி, மயி லாட்டம், ஒயிலாட்டம் என தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகள் நடைபெற்றன. மேலும் விழாவில் கழக மூத்த முன்னோடிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

விழாவில் பேசிய கழக கொள்கை பரப்பு செயலாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற்று தந்து, இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக புதுச்சேரியை மாற்றுவதற்கு திராவிட முன்னேற்ற கழகம் அர்ப்பணிப்போடு பணியாற்றி வருவகிறது. உங்களில் ஒருவராக, உங்களுக்காக ஓடோடி உழைப்பதற்கும், உங்களுக்கு பணி செய்ய உத்தரவிடுங்கள் என கேட்டு நாங்கள் வந்துள்ளோம். திராவிட முன்னேற்ற கழகம் தாய் பாசம் மற்றும் சகோதர பாசம் கொண்ட இயக்கம். புதுச்சேரியை பொருத்தவரைக்கும் இந்த ஆண்டு ஒரு சிறந்த ஆண்டாக அமையும், வளமான வலிமையான புதுச்சேரியை உருவாக்கு வதற்கு திராவிட முன்னேற்ற கழகம் பாடு பட்டுக் கொண்டிருக் கிறது. ஆகவே மக்கள் எதைப் பற்றியும் கவலைப்பட தேவையில்லை என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளா ளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் ந. தங்கவேலு, டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ்.எஸ். செந்தில்குமார், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், இந்திரா நகர் தொகுதி பொறுப்பாளர் பசுபிக் சங்கர், தொகுதி செய லாளர்கள் இரா. சக்தி வேல், வ. சீத்தாராமன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், கோ. தியாகராஜன், ர. சிவக் குமார், ரா. ஆறுமுகம், க. ராஜாராமன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், அணிகளின் அமைப் பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணி மாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) வீரய்யன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், மகளிர் தொண்டர் அணி சுமதி உள்ளிட்ட ஏராள மான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தட்டாஞ்சாவடி தொகுதி மக்களுக்கு பொங்கல் கரும்பு வழங்கிய ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்



புதுச்சேரி, ஜன. 13:

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதிக் குட்பட்ட அவ்வை நகர் பகுதியில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மக்களுக்கு கரும்பு வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்வுகள்:

மரியாதை நிமித்தமான சந்திப்பு: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சமீபத்தில் விலகிய அக்கட்சியின் முன்னாள் துணைச் செயலாளரும், ஏ.ஐ.டி.யு.சி. தொழிற் சங்கத்தின் முன்னாள் மாநில பொதுச் செய லாளருமான சேது செல்வம் அவர்களை, லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து பேசினார்.

உற்சாக வரவேற்பு: சேது செல்வத்தின் இல்லத்திற்கு வருகை தந்த ஜோஸ் சார்லஸ் மார்ட்டினுக்கு பட்டாசுகள் வெடித்தும், மலர் தூவியும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சேது செல்வத்தின் ஆதரவாளர்கள் 200 க்கும் மேற்பட்டோர் அவருக்கு பொன்னாடை அணிவித்து, பூங்கொத்து வழங்கி வரவேற்றனர்.

விருந்து உபசரிப்பு: இதனைத் தொடர்ந்து, லட்சிய ஜனநாயக கட்சித் தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கு சேது செல்வம் தனது இல்லத்தில் அறுசுவை அசைவ விருந்து அளித்து உபசரித்தார்.

கரும்பு வழங்கல்: விருந்துக்குப் பிறகு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சேது செல்வம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் கலந்து கொண்டு, அப்பகுதி மக்களுக்கு கரும்புகளை வழங்கி தனது பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

## கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை அனுமதியின்றி வணிக ரீதியாக பயன்படுத்த உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை

சென்னை: ஜன.13–

கமல்ஹாசனின் பெயர், புகைப்படங்களை அனுமதியின்றி வணிக ரீதியாக பயன்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. டிஷர்ட் தயாரிப்பு நிறுவனம் ஒன்று தனது புகைப்படத்தை பயன்படுத்துவதை சுட்டிக்காட்டி அவர் முறையீடு செய்திருந்தார்.

## ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளை சார்பில் சமத்துவ பொங்கல் விழா.. 100 நாள் திட்ட தொழிலாளர்களுக்கு பொங்கல் புடவைகள் வழங்கப்பட்டது.





ஈரோடு. ஜன. 13

காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளை சமூக அமைப்பு சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் 100 நாள் வேலைத்திட்ட தொழிலாளர்களுக்கு பொங்கல், கரும்பு மற்றும் சேலைகள் வழங்கப்பட்டது.

முன்னதாக சமத்துவ பொங்கல் வைத்து ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக்கட்டளை நிறுவன தலைவர் சாந்தாதேவி புதுப் பானையில் பொங்கல் வைத்து, சூரிய பகவானை வழிபட்டு அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்.

பின்னர் நடந்த நிகழ்ச்சியில் 100 நாள் வேலைத்திட்ட பெண் தொழிலாளர்களுக்கு, சர்க்கரைப் பொங்கல், கரும்பு மற்றும் சேலைகள் வழங்கி அவர்களுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு மக்கள் நல அறக்கட்டளையின் நிர்வாகிகள், திண்டல் சாந்தி, பிரியா, சத்தியமூர்த்தி, சண்முகநாதன், சௌந்தர்ராஜன் மற்றும் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## அரசு வழங்கும் பொங்கல் தொகுப்பில் மண்பாண்டங்களான பானைகள், அடுப்பு, சட்டி ஆகியவற்றையும் சேர்த்து வழங்கி குல தொழிலை பாதுகாத்திட வேண்டும் என மண்பாண்டத் தொழிலாளர்கள் கோரிக்கை :

திருவள்ளூர் ஜன 13 :

மண்பாண்டத் தொழில் என்பது களி மண்ணைப் பயன்படுத்தி பானைகள், மண் அடுப்பு. மண் குடங்கள், பொம் மைகள் போன்றவற்றைச் செய்யும் பழமையான கலை மற்றும் கைத் தொழில் ஆகும்; இது குலத்தொழில் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மண்பாண்டத்தால் செய்யப்படும் பானை, சட்டி, அடுப்பு, அகல் விளக்கு ஆகியவற்றை கடந்த காலங்களில் பயன்படுத்தி வந்தனர். வீட்டில் செய்யும் உணவு வகைகளை இந்த சட்டி, பானையில் செய்து அதை சாப்பிட்டவர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தனர்.

உணவு கெட்டுப் போகாமல் நஞ்சுத் தன்மையை உறிஞ்சி நல்ல உணவாக மாற்றித் தருவதால் நோயின்றி வாழ முடிந்தது. சமையல் செய்ய முதன் முதலில் உலகில் கண்டுபிடிக்கப் பட்ட பாத்திரமாக இந்த சட்டி பானையும் தான் உள்ளது. இந்த சட்டி பானையில் சமைத்து சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி போன்ற வியாதி குறையும் வாய்ப்பும்



உள்ளது. ஆனால் இந்த மண்பாண்டத் தொழில் தற்போது நலிவடைந்து காணப்படுகிறது. பொங்கல் பண்டிகையின் போது மட்டும் சம்பிரதாயத்திற்காக வாங்கி சமைக்கக் கூடிய நிலை உள்ளது. ஆனால் தற்போது அரசு சார்பில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் போது சின்ன பானைகளையும் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்போது தான் மண்பாண்ட தொழிலாளர்கள் முன்னேற்றம் அடையு முடியும் எனவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் அரசு சார்பில் சட்டி பானை செய்ய இயந்திரம் வழங்கினால் குலத் தொழிலை இளைஞர்கள் கற்று பயன்பெறுவார்கள் என்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். பொங்கல் திருநாள் தொடங்க 2 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் திருவள்ளூர் நகர் பகுதி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள மேல் நல்லாத்தூர், புட்லூர், செவ்வாப் பேட்டை, வேப்பம்பட்டு, ஈக்காடு, திருப்பாச்சூர், கடம்பத் தூர் உட்பட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் மண்பாண்ட தொழி லாளர்கள் பொங்கல் மண்பானை மற்றும் அடுப்பு தயாரித்து விற்பனைக்கு தயார் நிலையில் வைத்துள்ள னர். பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற தொழில் செய்கின்ற எங்களிடம் பானைகளை வாங்கி பொங்கலை கொண்டாட வேண்டும் என மண்பாண்ட தொழி லாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுச்சேரியில் திலகப்பிரியா நாட்டியக் கலை அகாடமியின் பிரம்மாண்ட பரதநாட்டிய அரங்கேற்றம்!



புதுச்சேரி, ஜன 13,

புதுச்சேரி கோலாஸ் நகரில் அமைந்துள்ள “திலகப்பிரியா நாட்டியக் கலை அகாடமி” (பதிவு எண்: 65/2015) சார்பாக, இளம் கலைஞர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் மற்றும் சலங்கை பூஜை விழா நேற்று மாலை 5 மணி அளவில் மிகச் சிறப்பாகத் தொடங்கியது. “மரபுக் கலைகள், மாண்பின் விதைகள்” என்ற உயரிய நோக்கத்துடன் இக்கலைக்கூடம் இந்த விழாவினை ஒருங்கிணைத்திருந்தது.

முன்னிலை வகித்த சான்றோர்கள் இந்த விழாவிற்குப் பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள் வருகை தந்து இளம் கலைஞர்களை வாழ்த்தினர்:

சிறப்பு விருந்தினர்: ரி. முரளிதரன் (புதுச்சேரி சுற்றுலாத்துறை இயக்குனர்).

கௌரவ விருந்தினர்: புதுவை கலைமாமணி டாக்டர் சுமதி சுந்தர் (இயக்குனர், புதுச்சேரி எழிலார் கலைக்கூடம்).

சிறப்பு அழைப்பாளர்கள்: T. குமரகுரு (ஜிரி குரூப் ஆஃப் கம்பெனீஸ்), திரு. கலை ஆனந்த் ரத்னம் (அமேசான் வெப் சர்வீஸ், மலேசியா), மற்றும் திருமதி டாக்டர் S. ரேகா (சித்த மருத்துவ அதிகாரி).

ஆசிரியரின் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகள்

இந்த அகாடமியின் நிறுவன ரும் தலைமை ஆசிரியருமான செல்வி. சண்முகப்பிரியா அசோக்குமார் (B.Com, MFA), வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கும் இக்கலையைக் கொண்டு செல்வதைத் தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டுள்ளார். இவர் “ஆடல் கலைமணி”, “ஆடல் பேருஞ்சுடர்” மற்றும் “சிறந்த நடன ஆசிரியர் 2025” உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் என்பது குறிப் பிடத்தக்கது.

மேடையில் ஜொலித்த இளம் தாரகைகள் குரு சண்முகப் பிரியாவின் சீரிய பயிற்சியில், கீழ்க்கண்ட மாணவிகள் தங்களது அரங்கேற்றத்தை நிகழ்த்தினர்:

செல்வி. மோகனா ஸ்ரீ: “ஆடல் கலைமகள்” விருது பெற்றவர் மற்றும் அகாடமியின் உதவி ஆசிரியர்.

செல்வி. தமிழ்த்தாமரை: பி.எஸ்.சி கணிதம் மற்றும் பி.பி.ஏ பரதநாட்டியம் பயின்றவர்.

இளம் கலைஞர்கள்: M. லக்ஷண்யா, S. கவியாழினி, M. கனிஷ்கா, A. ஸ்ரீ அக்ஷயா மற்றும் R. சாகி ஆகியோர் தங்களது நடனத் திறமையால் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினர். இசை மற்றும் ஒருங்கிணைப்பு நடன நிகழ்விற்கு உயிரூட்டும் வகையில் நேரடி இசைக்குழுவினர் பங்கேற்றனர், குரு சண்முகப்பிரியா மற்றும் குரு மோகனா ஸ்ரீ.

வாய்ப்பாட்டு: V. வேல்முருகன், M.A.

மிருதங்கம்: .V. வசந்த ராஜா, M.A.

வயலின்: S. கிருபாமுரளி, M.A.

இந்த விழாவினை நட்டுவாங்க கலைமணி P. புனிதா ஹரிகிருஷ்ணன் வரவேற்க, தொழில்முனைவர் அசோக் குமார் ராமச்சந்திரன் திறம்படத் தொகுத்து வழங்கினார். ஏராளமான கலை ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

# மகாத்மா காந்தி பெயர் நீக்கம்: மத்திய அரசைக் கண்டித்து புதுச்சேரியில் காங்கிரஸ் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்



புதுச்சேரி, ஜன.13–

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (100 நாள் வேலை திட்டம்), தேசத்தந்தை மகாத்மா காந்தியின் பெயரை ஒன்றிய பாஜக அரசு நீக்கியுள்ளதாகக் கூறி, அதனைக் கண்டித்து புதுச்சேரி மாநில காங்கிரஸ் பேரியக்கம் சார்பில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

முக்கியப் பங்கேற்பாளர்கள்: புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற இந்த எழுச்சிமிகு போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட முக்கியப் பிரமுகர்கள்: வி. நாராயணசாமி, முன்னாள் முதலமைச்சர். வைத்திதிலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர். ஷாஜகான், முன்னாள் அமைச்சர். ஆர்.கே.ஆர். அனந்தராமன், முன்னாள் அரசு கொறடா. . நிஷா, காங்கிரஸ் மகளிர் அணித் தலைவி. ஏ.வி. சுப்ரமணியன், மாநில காங்கிரஸ் தலைவர்.

கண்டன உரையின் சுருக்கம்: தேசத்தந்தையின் பெயரைத் திட்டங்களிலிருந்து மறைப்பது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிரானது என்றும், பாஜக அரசு வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுவதாகவும் தலைவர்கள் குற்றம் சாட்டினர். கிராமப்புற ஏழை மக்களின் உரிமைகளைப் பறிக்கவேண்டாம் என்றும், திட்டத்தின் பெயரை மாற்றாமல் தொடர வேண்டும் என்றும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் வலியுறுத்தப் பட்டது. ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் இந்த அறப்போராட்டத்தில் கலந்துகொண்டு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்லைவர் சரவணன் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார். அருகில் துணை ஆட்சியர் பாரூக் உள்ளார்.



திருச்சி, மரக்கடையில் 100 நாள் திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தி பெயரை நீக்கியதை கண்டித்து திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில், மாநில செயலாளர் யி. ரமேஷ்குமார், இளைஞர் காங்கிரஸ் மாவட்ட துணை தலைவர் தினேஷ் பாபு , இளைஞர் காங்கிரஸ் கணேசன் ,கோபி (எ ) பழனியாண்டி மற்றும் மாநில, மாவட்ட ,ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அமைச்சர்.



சேலம் மாநகர்,மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில்,மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தில் இருந்து காந்தியடிகளின் பெயரை நீக்கியதைக் கண்டித்து நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்.

# நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தமிழ்நாட்டில் தடை அல்ல:

## தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம்

சென்னை:ஜன.13–

நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தமிழ்நாட்டில் தடை விதிக்கப்படவில்லை என தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. "பாதுகாப்பு காரணங்களுக்காக ஹிஜாப் அணிந்து வருவோருக்கு நகை விற்பனை செய்யமாட்டோம்." என்று நகை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளதாக செய்தி ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இதற்கு பதில் தெரிவிக்கும் விதமாக தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில், தமிழ்நாட்டில் நகைக்கடைகளில் ஹிஜாப் அணிந்து வரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் தவறாகப் பகிரப்படுகிறது. உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள நகைக்கடைகளில் ஹிஜாபுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதாக செய்திகளில் வெளியாகி இருக்கிறது. தமிழ்நாட்டில் அல்ல. என விளக்கம் அளித்தது.

# மாநில அளவில் கபடி போட்டியில் 2 ஆம் இடம் கைப்பற்றிய வீரர் :




திருச்சி மாவட்டம் , மருங்காபுரி வட்டம் பில்லுபட்டியைச் சேர்ந்த குமார் மகன் ரஞ்சித் காஞ்சிபுரம் அருள்மிகு மீனாட்சி அம்மன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கபடி போட்டியில் 2 ஆம் இடத்தை கைப்பற்றினர். மேலும் வெற்றிக்கொப்பையுடன் ரூ 20,000 மதிப்பிள்ள காசோலையையும் பெற்றுக் கொண்டார்.

# கொங்கு வியாபாரிகள் நலச்சங்கம் சார்பில் முப்பெரும் விழா சிறு குறு வியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!!



திருப்பூர்ஜன:13

பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரிசி கடை வீதியில் நடைபெற்ற கொங்கு வியாபாரிகள் நலச்சங்க முப்பெரும் விழாவில் வணிகர் தினம் மற்றும் சிறுகுறுவியாபாரிகளுக்கு விழிப்புணர்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிறுவன தலைவர் காட்டன் பி. சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக புதிய திராவிட கழகம் நிறுவன தலைவர் கே. எஸ். ராஜ் கவுண்டர்.முக்குலத்தோர் தேசிய கழகம் நிறுவனத் தலைவர் எஸ். பி. ராஜாதேவர், திராவிட விடுதலைக் கட்சி தலைவர் அன்பு மகேஷ்.ஐ ஜே கே மாவட்ட தலைவர் பாரி கணபதி, அபு அதிமுக கழக பொதுச் செயலாளர் செந்தில்குமார். அம்மா மக்கள் முன்னேற்றக் கழக சுரேஷ்ராஜா, வியாபாரிகள் சங்கப் பேரவை மாவட்ட தலைவர் பாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள்

கலந்து கொண்டனர் சிலம்பாட்டம் கலை நிகழ்ச்சி என கலை கட்டிய விழாவில் சிறு குரு வியாபாரிகள் ஏராளமான கலந்து கொண்டனர் அதனைத் தொடர்ந்து வியாபாரிகள் நெகிழிப்பை ஒழிப்போம் என துணி மஞ்சள் பையை கையில் வைத்து விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்றனர் கலந்து கொண்ட அனைத்து வியாபாரிகளுக்கும் நினைவு பரிசு வழங்கப் பட்டது. விழாவில் பொதுச் செயலாளராக ஹேமந்த் பொறுப் பேற்றார்.

சாலையோரம் கடை வைத்துள்ள சாலையோர வியாபாரிகளுக்கு நிழற்குடைகள் வழங்கப்பட்டது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அவர்கள் அமர்ந்திருந்த பிளாஸ்டிக் சேர்களை அவர்களுக்கே பரிசாக அளித்தது கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது இந்த நிகழ்வில் கொங்கு வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் சார்பாக அலிப்ரான்,தேவராஜ், அங்கமுத்து,ஜோதி, கணேஷ்,சுரேஷ்குமார், சித்தன், ராஜேஷ்,ராஜா ,முகமது,கண்ணன், சந்திப், சீனிவாசன், சுப்பையா, அப்துல் ரஹீம்,லட்சுமணன் நந்தினி,சுனிதா,பானு, ஜெயந்தி, உள்ளிட்ட கொங்கு வியாபாரியின் நல சங்கத்தின் நிர்வாகிகள் பொதுமக்கள் பெரும் திரளாக பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர்....

# சாலை பாதுகாப்பு மாதம் !



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு பரமக்குடி போக்குவரத்து காவல் நிலையம், இளையான்குடி டாக்டர்.ஜாஹிர் உசேன் கல்லூரி சாலை பாதுகாப்பு சங்கம் சார்பில் இரு சக்கர வாகன பேரணி நடைபெற்றது. இந்த பேரணியில் இரு சக்கர வாகன ஓட்டிகள் தலை கவசம் அணிவது குறித்தும், போக்குவரத்து சிக்னல்களை மதித்து வாகனங்களை முறையாக இயக்குவது குறித்தும், விபத்து ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பரமக்குடி கிருஷ்ணா தியேட்டர் பகுதியில் தொடங்கி பரமக்குடி பேருந்து நிலையம், ஐந்துமுனை சாலை வழியாக பரமக்குடி நகர் காவல் நிலையம் சென்றடைந்தது. பரமக்குடி காவல் துணை கண்காணிப்பாளர் ஜெபராஜ் மற்றும் டாக்டர். ஜாஹிர் உசேன் கல்லூரி முதல்வர் ஜபருல்லாகான் ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர். பரமக்குடி காவல் நிலைய காவலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் பேரணியில் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த மருங்காபுரி ஒன்றியம் வளநாடு மயில்களை வேட்டையாடுவார்கள் வளநாடு காவல்துறையினர் பிடித்துவனத்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்



திருச்சி. ஜன.13–

மயில்களை வேட்டையாடிய நபர்களை பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தது தொடர்பாக, மயில்கள் வேட்டையாடியவர்கள் புதுக்கோட்டை பொன்னமராவதி பகுதி

1.கருப்பசாமி 28, S/O. அடைக்கன், கங்காளிப்பட்டி, மறவாமதுரை, 2.கார்த்திக் 25, S/O.சிங்காரம், அம்மன் குறிச்சி, 3.திருப்பதி 22, S/o.மணி, கங்காளிபட்டி, மறவாமதுரை. 4.பரத்குமார் 21, S/O. தங்கையா, கருமங்காடு, ஆலவயல்,

5.கருப்பையா 25, S/O.சின்னத்துரை, சின்னபிச்சம்பட்டி, ஆலவயல் மேற்கண்ட நபர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 5 மணி அளவில் வளநாடு பெரியகுளம் அருகே வேட்டையாடி கொண்டிருந்தபோது வளநாடு காவல் துறையினர் மேற்கண்ட நபர்களை பிடித்து விசாரணை செய்து அவர்களிடம் இருந்த நாட்டுத் துப்பாக்கி, இறந்து போன மயில்கள், டார்ச் லைட் ஆண்ட்ராய்டு, Ertica நான்கு சக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து அவற்றை மணப்பாறை வனத்துறை அலுவலர்களான மகேஸ்வரன் மற்றும்.இந்துமதி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் பள்ளி குழந்தைகளை காவு வாங்க காத்திருக்கும் மரம்



திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் பொன்னம்பட்டி துவரங்குறிச்சி , பில்லுபட்டி செல்லும் மூன்று பிரிவு சாலையில் 1000 த்திற்கும் மேற்பட்ட மாணவ , மாணவிகள் செல்லும் சாலையில் முறிந்து விழும் நிலையில் ஆபத்தான புளியமரம் மற்றும் மரத்தினை ஒட்டி செல்லும் உயர் மின் அழுத்தம் கம்பி செல்கிறது, எனவே உயிர் பலி அடையும் முன் உடனடியாக சரி செய்து தர அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# சேலம் மேற்கு தொகுதியில் பயணியர் நிழல் கூடம் திறப்பு மற்றும் எரிமேடை துவக்கம்.



சேலம் மாவட்டம் ஆவின் பால் பண்ணை எதிரில் சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பேருந்து பயணிகள் நிழல் கூடத்தை மூத்த முன்னோடிகள் கோபால்,ராமர் ஆகியோர் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள் தலைமையில் திறந்து வைத்தனர்.மேலும் சேலம் மேற்கு தொகுதி,சேலம் ஒன்றியம் தளவாய்பட்டி ஊராட்சி தளவாய்பட்டி,ஏரி காலனி,சடையாண்டியூர்,வட்ட முத்தம்பட்டி,மஜ்ரா கொல்லப்பட்டி ஆகிய பகுதியில் உள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மயானத்திற்கு எரிமேடை,போர்,டேங் அமைப்பதற்கு தமது சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்து பணியினை தொடங்கி வைத்த சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421